# இந்தியைக் கட்டாயப்படுத்தும் முயற்சி

Phone: No. 4502 Regd: No. M. 5458

விலை அரை அணா இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 31—12—50. | மணி 29

## திராவிடநாட்டை அடக்கியாளும் வெறியே

(:0:)

## வடநாட்டவரின் குறுகியபுத்தி

(o)

## கட்டாயமாக்குவதால் பகையே வளரும்

—சி. ஆர்.

சென்னை, டிச. 30—

இந்தியைத் திராவிடநாட்டில் கட்டாய பாடமாக்கிவிட இந்தி மொழி வெறியர்கள் கடந்த 15 ஆண்டுகளாகவே பெரு முயற்சி எடுத்து வருகின்றனர்.

காங்கிரஸ் ஆட்சி இந்நாட்டில் ஏற்பட்ட போதெல்லாம் அவ்வாட்சியைத் தங்கள் கைக் கருவியாகக் கொண்டு, இந்தியை நம் நாட்டின் மீது திணித்து நம் நாட்டை அடிமைப் படுத்த வடநாட்டவர் முயன்றனர். ஆனால் பஞதோல்வியே கண்டனர் இப்போது மீண்டும் இந்திவெறி தலையெடுக்கிறது.

இந்த நாட்டின் மீதோ, தமிழ் மொழியின்மீதோ உண்மையில் பற்றுக்கொண்டிராத சில விபீடனர்கள், இந்தியை இங்கு பரப்ப வடவர்களுக்கு ஆதரவாக இருந்து பெரு முயற்சி எடுத்தனர்.

தமிழ் நாட்டிலே, இந்திக்குக் கடும் எதிர்ப்பு, ஏற்பட்டு, திராவிட இயக்கத்தவர் அதற்கென ஆயிரக் கணக்கில் சிறை சென்று போரிடவே, அம்முயற்சி கைவிடப்பட்டது.

இப்போது மீண்டும் இந்திப் பேய் தலைதூக்கி யமர்ந்தது. எனினும், தமிழறியாச் சிலர் சமஸ்கிருதத்தை வளர்ப்பதாகக் கூறிக் கொண்டு, ஆங்காங்கே இந்திக்கு தவித்திட்டு வருகின்றனர். இந்தியையும் விரைந்து படித்து இந்நாட்டிலும் இந்திக்கு ஆதரவிருப்பதாகக் காட்டச் சில விபீடணர்கள் முயன்றும் வருகின்றனர்.

ஆனால் இந்நாட்டிலே இந்தி கட்டாயமானால் என்னாகும் என்பதை நன்கு நேரில் அனுபவித்தறிந்த சி. இராஜகோபாலாச்சாரியார் இந்தி வெறியர்களுக்குத் தக்க அறிவு புகட்டியும் அவர்கள் தங்கள் பிடிவாதத்தை விட்டபாடில்லை. இதனால் தமிழகத்தில், இந்தி பெரும் போராட்டத்தை உண்டு பண்ணிவிடுமேயொழிய அமைதிக்கு வழி கோலாது.

கோட்டா என்னுமிடத்தில் அகில இந்திய இந்திசாகித்திய சம்மேளனத்தின் 36-வது மாநாடு ஜே. சி. வித்யாலங்கர் என்பார் தலைமையில் கூடியது. இந்தியை இந்தியாவெங்கும் கட்டாயமாகப் பரப்ப வேண்டும் என்று துடிதுடிக்கும் பேர்வழிகள் இம்மாநாட்டைக் கூட்டினர். இந்த மாநாட்டிற்கு அ. இ. காங்கிரஸ் தலைவர் தாண்டன் சென்று இந்தியை விரைவாகக் கட்டாயப்படுத்திப் பரப்பி விட வேண்டும் என்ற கருத்தை ஆதரித்துப் பேசினர். விரைவில் ஆங்கிலத்தை ஒழித்துவிட்டு, இந்தியைப் பல்கலைக்கழக போதனா மொழியாகப் புகுத்திவிடுவதென்றும் தீர்மானம் ஒன்றை இந்தத் தாண்டன் ஆதரித்துப் பேசி நிறைவேற்றி வைத்தார்.

பொதுவில் இம்மாநாட்டினர் எப்படியாவது இந்தியை நம் நாட்டின் மீது கட்டாயமாகத் திணித்து விடுவதென்று முடிவுசெய்துகொண்டிருக்கின்றனர்.

இந்த மாநாடு கூடு முன்னர், இந்திய அரசாங்கத்தின் உள்நாட்டு இலாக்கா அமைச்சராகிய தோழர் இராஜகோபாலாச்சாரியார், இம்மாநாட்டிற்கு அனுப்பி யிருந்த ஆசிச் செய்தியில், "இந்திபாஷைப் பிரசாரத்தில் வலுக்கட்டாயமோ, அவசரமோ கூடாது. இந்திக்காரர்கள் பெரும் பான்மையோர் என்பதால் கட்டாயப்படுத்தும் முறையை இந்திப் பிரியர்கள் கைக்கொள்ளக் கூடாது. அதனால் நாட்டில் ஒற்றுமை ஏற்படுவதற்குப் பதில், எதிர்ப்பும் பிளவுமே பெருகும், இந்திக்காரர்கள் தங்களை அடக்கியாள முயல்வதாகத் தென்னாட்டவர் எண்ணிவிடுவர்" என்று எச்சரித்துக் கூறியுள்ளார்.

ஆனால் இந்த எச்சரிக்கை அந்த மாநாட்டினருக்கோ, தாண்டனுக்கோ மூளையில் ஏறவில்லை. இந்தி வெறியர்கள் எந்த உருவத்திலேனும் சரி, அரசாங்க அதிகாரத்தையே கையில் தாங்கி வைத்திருப்பதாகக் கர்ட்டினாலும் சரி தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயமாகத் திணித்து தமிழர்களை இந்திமூலம் அடக்கியாண்டுவிடலாம் என்று வித்யாலங்கர் அண்டு தாண்டன் கம்பெனியார் கருதினால் தமிழகத்தில் நிச்சயமாக அவர்கள் ஆசை மண்ணைக் கவ்வும் என எச்சரிக்க விரும்புகிறோம். தோழர் இராஜகோபாலாச்சாரி ஆட்சி பீடத்தில் அமர்ந்து, அதிகார தோரணையில் இந்தியைக் கட்டாயமாக்கிவிட்டுப் பட்டபாட்டின் அனுபவத்தைக் கொண்டே இத்தகைய எச்சரிக்கையை விடுத்திருக்கிறார். ஆனால், அவர் எச்சரிக்கையையோ நாட்டின் நிலையையோ சற்றும் கவனிக்காமல் நம்மை இந்தி மொழியைக் கொண்டு அஉமைப்படுத்த முயன்றால் தமிழகத்தில் இந்த இந்தி வெறியர்கள் மூக்கறுபடுவது உறுதி என்று எச்சரிக்கை செய்கிறோம். கட்டாய முயற்சி நிச்சயமாக இங்குப் பலிக்காது என்பதையும் இங்குள்ள விபீஷணர்கள் கட்டாய முயற்சியைக் காப்பாற்றிவிட முடியாது என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். தமிழகம் தன்னைக் கட்டாயப்படுத்தி அடிமையாக்க எண்ணும் எந்த முயற்சிக்கும் தலைவணங்காது என்பதை இந்திவெறியர்கள் உணர்வார்களாக.

## கடவுளர் களவாடப்பட்டனர்

(0)

## கடவுளை விற்றுப் பணம் திரட்டிய ஐயர்

தஞ்சை, டிச. 28---

நீடாமங்கலம் போலீசாராலும், பெருக வாழ்ந்தான் போலீசாராலும், கீழப்பட்டு பெத்தபெருமாள் ஆதித்த உடையார், நெடுவாக்கோட்டை கந்தசாமி நெடுவாண்டார், ரெத்தினவேலு ஆதித்த உடையார், உத்திராபதி நெடுவாண்டார், மீனாட்சிசுந்திர ஆதித்தஉடையார், மன்னார்குடி ஆறுமுகப்பிள்ளை, தஞ்சாவூர் கிருஷ்ணமூர்த்தி அய்யர் ஆகியோர்கள் பேரில் இ. பி. கோ. 109, 457, 380 செக்ஷன்கள்படி தொடுத்திருந்த வழக்கில் நீடாமங்கலம் சப்மாஜிஸ்டிரேட் தோழர் எஸ். ராமச்சந்திர பத்தர் முடிவு கூறினார்.

எதிரிகள் மன்னார்குடி தாலுகா புத்தகரம், நாவல் பூண்டி கிராமங்களில் உள்ள கோயில்களிலிருந்து சந்திரசேகரன். அம்மன், சம்பந்தர் விஷ்ணு, லக்ஷ்மி முதலிய சுவாமிகளின் பழங்கால உலோக விக்கிரகங்களை, இராக்காலங்களில் திருடியதாகவும், திருடிய சில விக்கிரகங்களை தச்சை ஐயன் கடைதெரு சீத்தாராமய்யரிடம் விற்பனை செய்து அவை பம்பாய்க்குஅனுப்பப்பட்டதாகவும் இக்குற்றங்களுக்குச் சில எதிரிகள் உடந்தையாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

திருட்டுகள் 1950 பிப்ரவரி, மார்ச்சு மாதங்களில் நடந்ததாகவும், திருட்டுப்போன எல்லா விக்கிரகங்களும் அகப்பட்டுவிட்டன வென்றும் தெரிகிறது.

மாஜிஸ்ட்ரேட் தீர்ப்புக் கூறுகையில் பெத்தபெருமாள், ஆதித்த உடையார் கந்தசாமி நெடுவாண்டார், ரெத்தினவேலு ஆதித்த உடையார், உத்திராபதி நெடுவாண்டார் ஆகிய நால்வருக்கும் இ. பி. கோ. 457ன்படி தலா ஆறுமாதம் கடுங்காவல் தண்டனையும், இ. பி. கோ. 380ன்படி தலா ஆறு மாதம் கடுங்காவலும் விதித்தார். மற்ற எதிரிகள் மீது போதுமான சாட்சியமில்லை என விடுதலை செய்யப்பட்டனர்.

---

### டெலிபோன் மூலம் கால நிலை அறியலாம்

லண்டன், டிச. 30—

டெலிபோன் செய்து சரியான மணி கேட்டு தெரிந்துக்கொள்வது போல காலநிலையையும் டெலிபோன் மூலம் கேட்டுத் தெரிந்து கொள்ள பிரிட்டனில் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

---

### ஹிட்லரிடம் சேவை செய்த ஜெனரல்கள்

லண்டன், டிச. 30—

ஹிட்லரிடம் சேவை செய்த ஜெனரல்கள் இப்போது ரஷ்யர்களிடம் சேவை செய்துவருவதாகவும், ரஷ்யர்களுக்கான படைகளைத் திரட்ட இவர்கள் முயன்று வருவதாகவும் இங்கு கிடைத்துள்ள செய்தியிலிருந்து தெரிய வருகிறது.

---

### மூலப்பொருள்கள் சேகரிப்புத் திட்டம்

பாரிஸ், டிச. 30—

உலகிலுள்ள மூலப்பொருள்களை ஒன்று சேகரிக்கவும் இந்த ஸ்டாக்கிலிருந்து உலக நாடுகள் தங்கள் தேவைகளைப் பெறவும் ஒரு திட்டம் ஏற்படுத்துவதற்கான பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறதென்று இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

# "மாலை மணி"

## ஜனவரி 1 முதல் விலை முக்காலணா

பத்திரிகை காகிதம் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள கஷ்டம் மென் மேலும் அதிகரித்து வருவதாலும், காகித விலை விஷம்போல் தின சரி அதிகரித்து வருவதாலும் இந்திய சர்க்காரின் பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு ஜனவரி முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வருவதால் பிரதி ஒன்றுக்கு அரை அணா வீதம் விற்பது பொருளாதார ரீதியில் இனி சாத்யமற்ற நிலை ஏற்பட்டுவிட்டதால் காகிதக்கட்டுப் பாடு நிலைமை நன்ருக தெளிவடையும் வரையில் தற்காலிக ஏற்பாடாக ஜனவரி முதல் தேதியிலிருந்து "மாலைமணி" பிரதி ஒன்று முக்காலணவாக விற்க முடிவு செய்துள்ளோம்.

"மானேஜர்"

## ஈ. வே. ரா. கார் ஏலத்தில் விற்பனை

பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் மோட்டார்கார், அவருக்கு விதிக்கப்பட்ட ரூ. 700 அபராதத்தைவசூலிப்பதற்காகவென்று திருச்சியில் தாசில்தாரால் ஏலம் போடப்பட்டதில், அந்தக் கார் திருச்சி சி. பி. இரத்தினவேலு தேவர் என்பவரால் ரூ 835—க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது. ஏலத்தில் எடுத்த அவர் அந்தக் காரை மறுபடியும் பெரியார் ஈ. வே. ரா. அவர்களுக்கே இனமாக அளித்து விட்டார்.

## தமிழ் நாடு கலைத்திருவிழா

மதுரை, டிச. 30—

அகில் இந்திய சினிமா நண்பர்கள் சங்கக் கட்டிடத்தில் தோழர் டி. கே. நாவலர் அவர்கள் தலைமையில் 22-12-50-ல் நிர்வாகக் கூட்டம் நடைபெற்றது.

அதுபோது, மதுரை புது மண்டபத்தில் ஜனவரி திங்கள் 7-ம் நாள் ஞாயிற்றுக் கிழமை 'தமிழ் நாடு கலைத் திருவிழாவை' இயல், இசை, நாடகம் என மூன்று பகுதிகளாகப் பிரித்து நடத்துவதென்றும், இயல் பகுதியில் தோழர்கள் மு. கருணாநிதி, கி. ஆ. பெ. விசுவநாதம், ப. ராமசாமி, நாரணதுரைக்கண்ணன், சா. கணேசன், அரு. ராமநாதன் ஆகியோருடன், மேலும் அறிஞர் பலரையும் அழைப்பதெனவும், இசைப்பகுதியில் தோழர்கள் எம். எம். மாரியப்பா, திருச்சி லோகநாதன், டி. எம். சௌந்திரராஜன், மாஸ்டர் சுப்பையா, தோழியர் பி. எஸ். செல்வா ஆகியோர்களும், நாடகப் பகுதியில் டி. கே. எஸ். சகோதரர்களுக்கு உரிமையுள்ள 'அந்தமான் கைதி' நாடகத்தை மதுரை, புதுமைக்கலா மன்றத்தாரை நடத்தித்தர ஏற்பாடு செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டில் நிறுவப்பட இருக்கும் 'தமிழ்க் கலைக் கழகத்திற்காக பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்ய பொதுச் செயலாளர், எம். எஸ். சுப்பிரமணியத்திற்கு அதிகாரமளித்தும் தீர்மானிக்கப்பட்டது.

செயலாளர், மதுரைமன்னன் நன்றி கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

## கல்கத்தாவில் பாரதி மாநாடு

கல்கத்தா, டிச. 23—

கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் "பாரதி மாநாடு" 23-12-50 மாலை துவங்கியது. இம் மாநாட்டில் பம்பாய் தமிழ்ச் சங்கம், டெல்லி தமிழ்ச் சங்கம், காக்பூர் தமிழ்ச் சங்கம், கோல்மூரி தென்னிந்திய தமிழ் சங்கம் இவைகளும் கலந்து கொண்டன. மாநாட்டைத் தோழர் கைலாச நாத்கட்ஜு திறந்து வைத்தார்.

மாநாட்டைச் சென்னைப் பல்கலைக் கழகத்தத்துவ இலாகத் தலைவர் டாக்டர் டி. எம். பி. மகாதேவன் துவக்கிவைத்துப் பேசியதாவது: பிறந்து வளர்ந்த தமிழ் மண்ணைவிட்டுப் பல நூறு மைல்களுக்கு அப்பால் வந்தும், தமிழ் மணம் பரப்பும் தமிழ்ச் சங்கத்துக் தனது வாழ்க்கைத் தெரிவித்தார் மேலும், விஞ்ஞானம்-கலை ஆகியவைகளைப் பிழைப்பதற்கென்றே கற்பது குற்றம். அவைகளை அறிவு வளர்ச்சிக்காகக் கற்கவேண்டும். விஞ்ஞானம் பொருளாதாரம், ஆகிய துறைகளில் நாம் மேல் நாட்டாருடன் போட்டிபோட வேண்டும் என்ருர்.

தமிழ்ப் பத்திரிகைக் கண்காட்சியைப் பேராசிரியர் சினிவாசராகவன் திறந்து வைத்துப் பேசியதாவது: தமிழ் நாட்டின் எல்லை வடவேங்கடம், தென்குமரி என்று பாரதியார் கூறியுள்ளது, நிலப்பரப்பைத்தான் குறிக்கின்றது என்றும், ஆனல் எங்கெங்குத் தமிழ்ப் பேசப்படுகின்றதோ அவையெல்லாம் தமிழ் நாட்டைச் சேர்ந்ததது என்று குறிப்பிட்டு மேலும், பத்திரிகைகளில் எது உயர்ந்தது, சிந்தனைக்குரியது என்பதை உணர்ந்து மக்கள அவைகளை ஆதரிக்க வேண்டும் என்று முடித்தார்.

பிறகு, குழந்தைகளின் நடன அரங்கும், இசை அரங்கும் நடைபெற்றது. முடிவில் அனைவருக்கும் செயலாளர் ப. ந. தியாகராசன் நன்றி கூற முதல் நாள் விழா இனிது முடிந்தது.

# எட்டணவுக்கே - இரண்டணா லாபம்!

—————:0:—————

# உணவு விடுதியில் உண்பவர்கள் ஏழைகளே

————(:0:)————

## முன்னாள் உதவி மேயரின் விளக்கம்

சென்னை, டிச. 28—

தி. சு. இலட்சுமணசுவாமி முன்னாள் உதவி மேயர் எழுதுவதாவது :—

இன்று பத்திரிகையில் ஓட்டல்காரர்களுக்கு சாப்பாட்டின் கிரயம் ரூ. 0-10-0 ஆக உயர்த்தப்பட்டிருப்பதாக அரசாங்கத்தின் அறிக்கை கூறுகிறது. எட்டணவிலிருந்து பத்து அணவாக உயர்த்துவதற்கு என்ன குடிமூழ்கிபோய்விட்டது என்று தெரியவில்லை. நேற்று வரையில் எட்டணவிற்குப் போடப்பட்ட சாப்பாட்டின் கிரயம், வேலையாட்களின் கூலி உள்பட ஐந்தணவிற்கு மேலிராது அப்படியிருக்க பொது மக்களின் கஷ்டம் சிறிதளவுந் தெரியாமற்படிக்கு பத்தணவாக உயர்த்தியிருப்பது பெரிதும் அதிக் கிரமம். உயர்த்துவதற்குக் காரணமே இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு சாப்பாட்டின் கிரயம் நான்கணவாக இருந்தபொழுது சாதம் (வயிறு நிறைய) பருப்பு, நெய், காய்கறி வகையில் இரண்டு தினுசு, சாம்பார், ரசம், மோர், அப்பளம், பச்சடி இத்தனை வகைகள் போடப்பட்டன.

இப்பொழுது எட்டணா கிரயத்திற்கு சாதம் (கால்வயிறு, கிராமவாசிகளுக்கு அரைக்கால் வயிறு) சிறிதளவு கோதுமைநொய் பொங்கி வைப்பது, சாம்பார், ரசம், மோர், காய்கறியில் ஒரு வகை, ஒரு பச்சடி, நெய் இவ்வளவுதான் அதன்றி முன் அளவிற்கு சாதம் குரைந்து போய்விட்டபடியால், சாம்பார், ரசம், மோர், மிக மிக குறைந்த அளவுதான், ஒரு மனிதருக்குச் செலவாகிறது. ஆகையால் அவர்கள் போடும் சாதம், கோதுமை ஓர் ஆளுக்கு ஒன்றரையணா தான் விலையிருக்கும், மற்ற காய்கறி, சாப்பிடுகிற இலை சேர்த்து ஒரு அணா விலை, சாம்பார், ரசம், மோர் இவை மூன்றின் செலவு ஒருஅணவாகும் நெய் அரையணா, இவை தயார் செய்வதற்கு இரண்டணா ஆக மொத்தம் 5 அணதான். வேண்டுமானல் 6 அணா ஆகட்டும் ஆகையால் குறைந்தது 2 அணா லாபம் ஒரு ஆள் சாப்பாட்டுக்கிருக்கிறது. அப்படியிருக்க எதற்கு மேலும் 2 அணா உயர்த்த வேண்டும். ஓட்டல் முதலாளிகள் வந்து முறையிட்டால் அரசாங்கத்தார் உயர்த்திவிடுவதா? எந்தக் காலத்திலாகிலும் மந்திரிமார்களோ அல்லது கலெக்டர், சிவில் சப்ளை கமிஷனரோ ஓட்டலில்போய் சாப்பாடு சாப்பிட்டிருப்பார்களா? சாப்பிட்டதே கிடையாது. சாப்பிடுகிறவர்களுக்குத்தான் ஓட்டல்காரர்கள் போடும் சாப்பாட்டின் தரமும், அதன் விலையும் தெரியும்.

உண்மையை சொல்ல வேண்டுமானல் சென்ற சில வருஷகாலமாக 8 அணா கொடுத்து சாப்பிடுகிருர்கள். சாப்பிட்ட பிறகு வயிறு எரிந்து வெளியில் வருகிருர்கள். காரணம் நல்ல முறையில் சாப்பாடு தயாரிப்பது கிடையாது. மனித சரீரத்தின் சுகாதாரத்திற்கு மிகவும் குறைவான சாப்பாடு. அதன்றி இப்பொழுது சாமான்கள் விற்கும் விலையிலுங்கூட 8 அணவே கள்ள மார்க்கெட் விலை ஆகையால் அரசாங்கம் உடனே விலையை 8 அணவாக செய்யவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் உயர்த்துவதற்கு ஆதாரமில்லை. ஏனெனில் சென்னையில் ஒரு நாள் ஒன்றுக்கு சுமார் 50,000 மக்கள் ஓட்டலில் சாப்பிடுகிறவர்கள் இருக்கிருர்கள். பெரும்பான்மையோர் ஏழைகள் தான். ஓட்டல்காரர்கள் ஏழைகள் வயிறு எரிய பணம் சம்பாதிப்பது சரியல்ல. அந்த உயர்விற்கு உடந்தையாயிருக்கும் அரசாங்கமும் பின்னர் பொதுமக்களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும். பொது மக்கள் இது சம்பந்தமாகக் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## சென்னை ராஜ்யத்திற்கு 13,500 டன் சர்க்கரை

சென்னை, டிசம்பர். 30—

சென்னை ராஜ்யத்திற்கென்று ஜனவரி, பிப்ரவரி மாதங்களுக்கு இந்திய சர்க்கார் சுமார் 13,500 டன் சர்க்கரை ஒதுக்கி வைத்திருக்கின்றனர்

இவைகளில், 9,800 டன் இறக்குமதி கோட்டாவிலிருந்து ஒதுக்கப்படும்என்றும், 3,700 டன் உள்நாட்டு தொழிற்சாலையிலிருந்து ஒதுக்கப்படுமென்றும் தெரிய வருகிறது.

## இந்தியாவின் கச்சா பருத்தி ஏற்றுமதி

1950 ஆகஸ்ட் மாதம் வரை முடியும் 12 மாதங்களில் இந்தியா 2,48,000 பருத்தி பேல்களை ஏற்றுமதி செய்திருக்கிறது.

இவைகளில் அதிகம் பெற்றது பெல்ஜியம்தான். 78000 பல்இது பெற்றிருக்கிறது. அமெரிக்கா 64000 பேல்களையும், ஜப்பான் 52000 பேல்களையும், பிரிட்டன் 12000 பேல்களையும் இந்தியாவிடமிருந்து பெற்றிருக்கின்றன.

1947-48ல் இந்தியா 800,000 பேல்கள் ஏற்றுமதி செய்திருக்கிறது 1949-50ல் 21,65000 பேல்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஒவ்வொரு பேலின் எடை 392 பவுண்டுகளாகும்.

## நகர சினிமாக்களில்

[தமிழ்]

| | | |
|---|---|---|
| காஸினோ | ... | ஏழைபடும்பாடு |
| கிரவுன் | ... | ,, |
| சரஸ்வதி | ... | ,, |
| கெயிட்டி | ... | பாரிஜாதம் |
| சினிமா சென்ட்ரல் | ... | ,, |
| சித்ரா | ... | வீட்டுக்காரி |
| மகாராணி | ... | ,, |
| பாரகன் | ... | ராஜாவிக்ரமா |
| லட்சுமி | ... | ,, |
| ராஜகுமாரி | ... | ,, |

[ஹிந்தி]

| | | |
|---|---|---|
| சாகர் | ... | அன்மோல்ரட்டன் |
| சன் | ... | சோட்டிபாபி |
| அசோக் | ... | சர்கம் |
| வெலிங்டன் | ... | ஷீஷ்மகால் |
| செலக்ட் | ... | ஷப்னம் |
| கிருஷ்ணா | ... | ஷான் |

[ஆங்கிலம்]

| | | |
|---|---|---|
| நியூஎல்பின்ஸ்டன் | ... | SAMSON AND DELILAH |
| நியூகுளோப் | ... | FOREIGN LEGION |
| மிட்லண்ட் | ... | THREE MUSKETEERS |

[நாடகம்]

| | | |
|---|---|---|
| ஒற்றைவாடை | ... | ரத்தக்கண்ணீர் |



தோழர் எஸ். ஏ. பி. யூசப்

திராவிட இயக்க முக்கியஸ்தரான தோழர் பாவலர் அவர்களின் திருக்குமாரர். முன்னேற்றக் கழக முக்கியஸ்தருமாவார். இவர் இப்பொழுது தோழர் எம். ஆர். ராதா அவர்கள் நடிக்கும் "ரத்தக் கண்ணீர்" நாடகத்தில் பாலுவாகத் தோன்றி மிகத் திறம்பட நடிக்கிறார். ரத்தக் கண்ணீர் நாடகத்தில் ராதாவுக்கு அடுத்தபடியாக உள்ள மிக முக்கியமான பகுதி உதவி கதாநாயகன் பாலுதான். நாடக ஆரம்ப முதல் கடைசி வரையில் தோன்றும் பாலுவேடத்தில் தோழர் யூசுப் தோன்றி நடித்து ரசிகர்களை ஆனந்தபரவசமடையச் செய்து வருகிறார். வருங்காலத்தில் தோழர் யூசப் அவர்கள் மிகச் சிறந்த நடிகராக விளங்குவார் என்பதில் சந்தேகமில்லை. சினிமாவிற்கேற்ற உடலமைப்பும்-முகவெட்டும்-தெளிவான வசன நடையுடன் திறமையான நடிப்பும் ஒருங்கே வாய்க்கப்பெற்று விளங்குகிறார்.

# 144! 144!

[டிசம்பர் 23, 24 தேதிகளில் காஞ்சியில் நடந்த தி. மு. க. மாநாட்டில் என்னெஸ்கே பிலிம் பாடகர் தோழர் கே. ஆர். செல்லமுத்து பாடியது, இயற்றியவர் தோழர் சுப்பு ஆறுமுகம்.]

(கட்டபொம்மு மெட்டு)

அன்னியன் போட்டதும் ஒன்பார்ட்டிபோர்—காந்தி
அன்பாளர் போட்டதும் ஒன்பார்ட்டிபோர்!
என்ன இது மக்கள் ஆட்சி எக்றே—பாடும்
என்போன்ற எல்லார்க்கும் ஒன்பார்ட்டிபோர்!

"ஆரிய மாயை"க் கூறப் போனால்—தேடி
அங்கேயும் பாயுது ஒன்பார்ட்டிபோர்
சீரிய "பொன்மொழி" சொல்லப்போனால்—அங்கும்
சீறிக் கடிக்குது ஒன்பார்ட்டிபோர்!

போக்குக்கெதிர் கேள்வி கேட்கப்போனால்—உள்ளே
பிடித்து வைக்குது ஒன்பார்ட்டிபோர்!—நாமே
"தூக்குமேடை" செய்து ஏறினாலும்—அங்கும்
துள்ளிக் குதிக்குது ஒன்பார்ட்டிபோர்!

இராவணன் வாழ்ந்த அந் நாளிலுமே—ஆரிய
இராமனும் போடா ஒன்பார்ட்டிபோர்,
திராவிடர் "காவிய ராவணனை"—இன்று
தேடி வருகுது ஒன்பாங்ட்டிபோர்!

கூட்டை விரும்பாது நாட்டில் வந்தே—இசை
கூவும் "குயிலு"க்கு ஒன்பார்ட்டிபோர்
தீட்டும் "அறப்போர்வாள்" கையில் கொண்ட—தீரர்
ஏட்டுக்கும் இந்நாளில் ஒன்பார்ட்டிபோர்!

"நல்லமுடிவு" என்ற நாடகத்தைக்—காண
நடுவில் வந்தது ஒன்பார்ட்டிபோர்!
நல்ல துணிவுள்ள நாடெதுக்கும்—தீய
நண்பனய்யா இந்த ஒன்பார்ட்டிபோர்!

"குன்றத்"திலும் மக்கள் மன்றத்திலும்—இன்று
குடியிருக்குது ஒன்பார்ட்டிபோர்!
தென்றல் விரும்பிச் சிறை சென்றாலும்—அங்கும்
தின்று வளருது ஒன்பார்ட்டிபோர்!

கண்ணில் கறுப்பினைக் கொண்டவர்கள்—முன்பு
கையில் கறுப்பினைத் தூக்கியதால்,
மண்ணில் இரத்தமும் சிந்தியதே—அந்த
மண்ணுக்கும் வந்ததே ஒன்பார்ட்டிபோர்!

எண்ணும் மனத்துக்கு ஒன்பார்ட்டிபோர்—என்று
எழுதினால் அங்கும் ஒன்பார்ட்டிபோர்!
கண்ணுக்கும் காதுக்கும் ஒன்பார்ட்டிபோர்—என்று
காரியம் செய்தாலும் ஒன்பார்ட்டிபோர்!

என்நாடு என்வீடு என்று மக்கள்—இங்கே
இன்பமாக வாழ வேண்டுமானால்
ஒன்பார்ட்டிபோருக்கு ஒன்பார்ட்டி—போட
உறுதி கொண்டிரு திராவிடமே!!!

## இனி நடப்பவை

மதுரை நகர் (கிளை):—1-1-51 திங்கள் மாலை 4-30 மணிக்குப் பெருந்தகைத் தோழர் எஸ். முத்து அவர்கள் தலைமையில் அழகாடி ஆச்சி மடத்தில் மாணவர் கூட்டம் நடக்கும். அதுபோது பொங்கல் விழாபற்றியும், புதிய செயலாளரும் பிற நிர்வாகிகளும் தேர்ந்தெடுத்தலும் நடைபெறும்.

* * *

அலங்காநல்லூர்:—3-1-51 புதன் மாலை 4-30 மணிக்கு தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எஸ். முத்து இவர்கள் அழகிரி மைதானத்தில் நடக்கும் பொதுக்கூட்டத்தில் பேசுவார்கள்.

* * *

நெல்லிக்குப்பம்:—திரௌபதி அம்மன் திடலில் 17-12-50-ல் நடக்க இருந்த பொதுக்கூட்டம் 7-1-51 ஞாயிறு அன்று நடைபெறும். அதுபோது என். வி. நடராசன், சி. இளவழகன், கடலூர் சாமிநாதன் இவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சென்னை:—(10-வது வட்டம்) வரும் ஞாயிறு 31-12-50 காலை 10 மணிக்கு 83 தையப்ப முதலி வீதியில் தோழர் எ. ஆர். சேசாசலம் தலைமையில் "வாலிபரும்-சமூகமும்" என்னும் பொருள்பற்றி பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

### நார்வே சிறையில் யுத்தக் கைதிகள்

நார்வே சிறைகளில் 262 யுத்தக்கைதிகள் இருந்து வருகின்றனர். இவைகளில் 40பேர்ஜெர்மானியர்கள். 22 பேர்நார்வே ஜீயர்கள்

## சினிமா செய்திகள்

### ஜூபிடர் மர்மயோகி

கோவை சென்டரல் ஸ்டியோவில் வெகு வேகமாகத் தயாராகிவரும் ஜூபிடர் மர்மயோகி தமிழ்ப் படம் பொங்கல் புத்தாண்டில் வெளிவருமெனத் தெரிகிறது. ஏராளமான பொருட் செலவில் கடந்த ஓராண்டு காலமாகத் தயாரித்துவரும் இப்படத்தைத்தோழர்ராமநாத்டைரெக்ட் செய்கிறார். படத்தில்-வீரம், சோகம்-களிப்பூட்டும் நடனக் காட்சிகள் யாவும் காண்போர் மனத்தைக் கவரும் வகையில் அமையப்பெற்றிருக்கின்றனவாம். பொதுவாகக் கூறுமிடத்து 1951-ம் ஆண்டு படங்களில் இது முதன்மை ஸ்தானம் வகிக்குமென்பதில் ஐயமில்லையாம்.

* * *

### பராசக்தி;

சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்ட கதை இதில் தோழர் சிவாஜி கணேசன் கதாநாயகனாகத் தோன்றி நடிக்கிறார். கதை வசனம் நமது தோழர் மு. கருணாநிதி எழுதுகிறார். படம் மிக மிக வேகமாக ஏ. வி. எம். ஸ்டியோவில் தயாராகி வருகிறது. படம் அநேகமாக தமிழ் ஆண்டு ஆரம்பித்தில் வெளிவருமென்று கூறப்படுகிறது. படத்தைகிருஷ்ணன்-பஞ்சுடைரெக்ட் செய்கிறார்கள். படத்திற்குறி பாட்டுகளைத் தோழர் காமாட்சியும் தோழர் கண்ணதாசனும் தயாரிப்பதாகத் தெரிகிறது. ரசிகர்கள் கண்டுகளிக்கு வகையில் படம் முதல்தரமானதாக இருக்க வேண்டுமென்று இரவு பகலாக நேஷனல் பிக்சர்ஸ் பெருமாள் பாடுபட்டு வருகிறார்.

* * *

### ஔவையார்

ஜெமினியில் தயாராகும் ஔவையார் என்ற படத்தில் தோழியர் கே. பி. சுந்தரம்பாள் நடிக்கிறார். படம் அநேகமாகத் தயாராகிவிட்டது இன்னும் ஓரிரண்டு மாதங்களில் திரையிடப்படும் என்று தெரிகிறது.

* * *

### சொர்க்கவாசல்

அறிஞர் அண்ணாவின் கற்பனைச் சித்திரம். இப்படம் மனோகரா பிக்சர்ஸ், பரிமளா பிக்சர் கூட்டுத் தயாரிப்பு. இப்படத்தில் தோழர் கே. ஆர். ராமசாமி கதாநாயகனாகத் தோன்றுகிறார் காசிலிங் டைரெக்ட் செய்கிறார். படத் தயாரிப்புக்குறிய வேலைகள் யாவும் முடிந்து விட்டதாகவும் சீக்கிரத்தில் படப்பிடிப்பு வேலைகள் துவக்கப்படுமென்றும் தெரிகிறது

* * *

### ஏழை படும்பாடு

பட்சி ராஜாவின் ஏழை படும்பாடு எங்கும் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. முக்கிய பாத்திரமாக நடிக்கும் தோழர் நாகையா படத்தில் பல ரூபத்தில் தோன்றி ரசிகர்களை மகிழ்விக்கிறார் கதை அமைப்பு, பாட்டு, நடனம் முதலியவைகள் மிகச் சிறந்த முறையில் அமைந்துள்ளன.

* * *

### ரத்தக்கண்ணீர்

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கள் நடிக்கும் ரத்தக்கண்ணீர் நாடகம் இரண்டு மாதங்களாக நடைபெற்று இன்றுடன் கடைசி நாடகமாக நடைபெறுகிறது. நாடகம் முடிந்ததும் தோழர் ராதா அவர்கள் தமது குழுவினருடன் பெங்களூர் போகிறார். சென்னை வாசிகள் நன்மதிப்பைப் பெற்று பெங்களூர் சென்று சீக்கிரம் சென்னைத் திரும்பி ராதாவின் மற்ற நாடகங்களை காணும் சந்தர்ப்பத்தை நமக்கு உண்டாக்கித் தருவாரென்பதில் ஐயமில்லை.

# கழக நடவடிக்கைகள்

கோவை:—21 12—50ல் தி. மா. மு. க. செயற்குழுக் கூட்டம் சி. எஸ். சின்னதுரை அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாணவர் கழக வளர்ச்சிக்காக இம்மாதத்திற்கு செயற்குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 1 ரூபாய் வீதம் கொடுப்பது: கோவைக்கு வடநாட்டு மந்திரிகள் வரும்போது தி. மு. கழகத்தின் பொது மக்கள் கருப்புக் கொடி பிடிக்கும் போது மாணவர் கழகம் அவர்களுக்குத் தொண்டர்களாகப் பணிபுரிவது. கோவை மாவட்டத்தில் மாணவர் கழகங்கள் இல்லாத இடங்களில் மாணவர் கழகங்களை அமைக்க தோழர் செழியன் அவர்களை அமைப்பாளராகத் தேர்ந்தெடுத்தது. இன்னும் பல முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றிய பிறகு செயலாளர் நன்றிகூற கூட்டம் 8-மணிக்குஇனிது முடிந்தது.

* * *

கீரப்பாளையம்:—24-12-50ல் தி. மு. கழகத்தின் செயற்குழுக் கூட்டம் அழகிரி படிப்பகத்தில் நடைபெற்றது செயலாளர் மா. கண்ணையன், பொருளாளர் மா. பழனிவேல், விளம்பர உறுப்பினர் கே. கே. மூர்த்தி.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள் ஏ. கே, இராமசாமி, கே. பி. சுப்பிரமண்யன், வெ. துரைராசி, ந. கோபாலகிருஷ்ணன், து. பூவராகன், தாமோதரன், ஜி. எஸ். இபுருயீம், சு. இரத்தினம், மா. இராமையன், வே. முத்துக்குமரன், இரா. விட்டல்தாசு, அ. கோவிந்தசாமி, எம். டி. மூர்த்தி, இவர்களைத் தேர்ந்தெடுத்து நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

கோவில்பட்டி:—திராவிட மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் குழுக் கூட்டம் 24-12-50ல் தோழர் டி. பி. மதிவாணன் தலைமையில் கூடியது. கே. எம். மாரியப்பா இன்னிசை பாட கூட்டம் ஆரம்பமாயிற்று. தலைவர் தமது முன்னுரையில் கூட்டம் கூட்டப்பட்டதின் நோக்கம் பற்றியும், நிர்வாகிகள் தேர்தெடுக்கும் முறை பற்றியும் விரிவாகப் பேசினார். அடுத்து டபிள்யூ. டி, துரைசாமி "மாணவரும் அரசியலும்" என்பதுபற்றிப்பேசினார். பி. பாலகிருட்டினன், எஸ். எஸ். அமீர் ஆகியோர் நிர்வாகி தேர்தல் பற்றி பேசினார்கள். அதன்பின் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள்:- அமைப்பாளர் டி. பி. மதிவாணன், செயலாளர் சு. செ, இளங்கோவன், துணைச் செயலாளர் செ. உலகநாதன், பொருளாளர் எஸ். இராமையா, விளம்பர உறுப்பினர் இரா. மாறன். செயற்குழு உறுப்பினர்கள் எஸ். எஸ். அமீர், மு. அன்பானந்தம், பூ. சந்திவீரசாமி, பா. குருசாமி, பி. மனோகரன், டி. பி. பொன்னுசாமி, டி. எஸ், பாண்டியன், கே. துரைராசு கே. எம். மாரியப்பா. ஏ. ராமசாமி. இரா. பெரும்வழுதி, இவர்களைத் தேர்ந்தெடுத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நன்றி கூறியதும் கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

பாகனேரி:—23-12-50ல் தி. மு. க. கிளை நிறுவப்பட்டது. செயற்குழுவினர் செயலாளர் கருணாநிதி, துணைச் செயலாளர் அ. மனோரஞ்சன், பொருள் உறுப்பினர் கே. ஆர். எஸ். இளங்கோ, விளம்பர உறுப்பினர் ஆர். எம். எம். எஸ். மணி, மற்றைய செயற்குழுவினர் ரா. தேனப்பன், பி. டி. சம்பந்தம் எம். பி. ஆர். சாமி, எஸ். ஒ. எஸ். பி. ஒ. பில்லப்பன், பி. எஸ். மூர்த்தி, ஆ. வி. எஸ். ஆ. எம். தாண்டன், எம். காளலிங்கம் இவர்களைத் தேர்ந்தெடுத்து நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது:

* * *

குனிச்சி:—25-12-50ல் கே. ஆர். அப்பண்ணன் தலைமையில் நெசவாளர் திராவிட முன்னேற்றக் கழகம் கிராம மக்களால் நிறுவப்பட்டது. தலைவர் ம. ஆர். அப்பண்ணன் உப. தலைவர் கே. எம். பாண்டுரங்கன் செயலாளர் கே. ஏ. ராமசாமி, துணைச் செயலாளர் கே. என். சிவசுந்தரம் நிதியாளர் கே. வி. பெத்து நிர்வாகக் கமிட்டித் தலைவர் கே. ஆர். கோபால், இவர்களைத் தேர்தெடுத்தபின் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

* * *

திருநகரம் அருப்புக் கோட்டை.- சீர்திருத்த முன்னேற்றக் குழு கூடி 25-12-50ல் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் ஆ. நா. அண்ணாமலை, பொருள் காப்பாளர் சோ. சண்முகவேலன், உறுப்பினர்கள் பெ. குருசாமி, சு. குருசாமி, வை. குருசாமி, க. ராமமூர்த்தி, கு. நமசிவாயம்.

* * *

மேல்பட்டாம்பாக்கம்:-24-12-50 ல் தி. மு. க. செயற்குழு கூட்டத்தில் சபாபதி, சௌந்திரபாண்டியன், கதிர்வேலு, பரமசிவம், பாலசுப்பரமணியம் மதியழகண், ச. இராசகோபாலன் கழக வேலைத் திட்டம் பற்றிப் பேசிய பின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதும், நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

## அறிவிப்பு

தோழர்களின் வசதியை முன்னிட்டு கோவை நகர தி. மு. க. கட்டிடத்தில் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்குச் சொற்பயிற்சி நடைபெறும். தோழர்கள் அனைவரும் வந்து பயிற்சி பெருமாறு கேட்டுக்கொள்ளுகிறார் சொ. பயிற்சி செயலாளர்.

* * *

கோவை நகர தி. மு. கழக கட்டிடத்தில் தோழர்களின் வசதிக்காக "தியாகராயர் படிப்பகம்" திறக்கப்பட்டுள்ளது.

மாலை 6 மணி முதல் 8 மணி வரை திறக்கப்படும். தமிழ்-ஆங்கில புத்தகங்கள் உண்டு. தோழர்கள் உறுப்பினராகச் சேர்ந்து புத்தகங்கள் பெற்றுச் சென்று பயனடையுமாறு செயலாளர் எழுதுகிறார்.

## தமிழர் மறுமலர்ச்சி மன்றம்

14-1-51 திருவள்ளுவர் ஆண்டு 1982 தை 1-ம் நாள் ஞாயிறு மாலை 6-30 மணி அளவில் பி. எஸ். இராமலிங்கம் அவர்கள் தலைமையில் த. ஆறுமுகம், எம். எஸ். இராமசாமி, எம். சதாசிவம், க. நெடுஞ்செழியன் ஆகியோர் 'பொங்கல் விழாவும், தமிழர் பண்பாடும்' என்பது பற்றி பேசுவர்.


வேகமாக அச்சாகி வருகிறது!

## 'மாலைமணி' பொங்கல் மலர்

அதிக பக்கங்கள்! அண்ணாவின் முகப்புபடம்!!

அரியதோர் ஆராய்ச்சி கட்டுரைகள்

மலரில் தி. மு. கழகத் தலைவர்களின் படங்கள், கட்டுரைகள் மிளிரும். தேவைக்கு முந்துங்கள்!

பிரதிகள் வேண்டுவோர் உள்ளூர் ஏஜண்டுகளிடம் தங்கள் தேவையை முன்னதாகவே பதிவு செய்துக்கொள்ளவேண்டும்.

ஏஜண்டுகள் தங்கள் தேவையை 8—1—51க்குள் நமது அலுவலகத்திற்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

தேவைக்குறிய பிரதிகளுக்கு முன்பணம் மேற்குறித்த தேதிக்குள் அனுப்பவேண்டும். முன்பணம் கிடைக்கப்பெற்றவர்களுக்குமட்டும் பொங்கல் மலர் அனுப்பப்படும்.

தனிப் பிரதி விலை அணா 4

"மாலைமணி" அலுவலகம்

மண்ணடி :: சென்னை-1.


## நெல்லும் — பதரும்

சில மாகாண மொழிகள் 2000 ஆண்டு பழமையானவை. அவைகளுக்குப் போட்டியாக இந்தியை ஏற்படுத்துவது தவறு. இப்படிப்பட்ட தொன்மையான மொழிகளை இந்தி ஒரு நாளும் அசைக்கமுடியாது.

—வித்யாலங்கர்

இந்திமொழியின் ஏகாதிபத்தியம் ஏற்பட்டுவிடுமோ என்று தென் இந்தியர் அஞ்சுகிறார்கள். இந்தி கற்றுக்கொள்வதற்குச் சில உண்மையான சங்கடங்களும் இருக்கின்றன.

தென்இந்திய மொழிகள் ஏதாவதொன்றை வட இந்தியர் கற்றுக்கொண்டு அதை வளர்க்க முயற்சித்து தென் இந்தியர்களிடம் நம்பிக்கை ஏற்படுத்தலாம். தென் இந்தியர் உயர்ந்த நூல்களை இந்தியில் மொழிபெயர்க்கவேண்டும்.

—திவாகர்

இந்தியினால்தான் நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்ட முடியுமென்றும், இந்தி காரணமாக ராஜ்ய மொழிகளுக்கு ஹானி ஏற்படா வண்ணம் பார்த்துவருவதாகவும், ஆனால் இந்தியின் நலனைப் பாதிக்கும் ரீதியில் பிரதேச மொழிகள் தங்களுக்கு இஷ்டமான வழியைப் பின்பற்றுவது விரும்பத்தக்கதில்லை.

—தாண்டன்

## சமாதானப் பொதுக் கூட்டம்

31-12-50 ஞாயிறு மாலை 5-மணிக்கு நேப்பியர் பார்க்கில் வி. சக்கரைச் செட்டியார் தலைமையில் உலக சமதான காங்கிரஸ் பிரதிநிதி ஹரீந்தரநாத்சட்டோபாத் யாயா, 'விடுதலை' ஆசிரியர் எஸ். குருசாமி, வி. முனுசாமி, பி. கருப்பண்ணன் ஆகியோர் பேசுவார்கள்.


Edited, Printed & Published by T. M Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I.


## செம்பியத்தில் முதியோர் கல்வி

செம்பியம் மார்க்கட் தெருவு, ஜமால்மொகதீன் மார்க்கட் மெத்தையில் கடந்த ஒரு மாதமாக முதியோருக்குப் பயிற்சி பெற்ற ஆசிரியரால் கல்வி போதிக்கப்படுகிறது. இதைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு சுப்ரமணியம் அவர்கள் கேட்டுக்கொள்ளுகிறார்.

## நாம் மூவர் அல்லது நம்நாடு

என்னும் நாடகம் 31-12-50 ஞாயிற்றுக்கிழமை இரவு 9-30 மணிக்கு சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கள் தலைமையில் நடைபெறும். கதை வசனம் தோழர் ஏ, எஸ். வேணு எழுதியது. நாடகம் "நியூ ஜஸ்டிஸ்" ஆங்கில வார இதழ் நிதிக்காக நடைபெறுகிறதாம்.

## அறிக்கை

நெல்லிக் குப்பம் ரெட்டித் தெரு ஜனார்த்தனம் இல்லத்தில் 7-1-51 அன்று மாலை 4 மணிக்கு "திராவிடன்" ஆசிரியர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் திராவிடர் மாணவர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெறும். தென்னாற்காடு மாவட்ட அமைப்புக் குழுவாக அமைக்க வேண்டியிருப்பதால் அவ்வட்டாரத்தில் தி. மு. மா. கழகம் ஏற்படுத்தியுள்ள கிளைக் கழகங்கள் அனைத்தும் 2 பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறார் ச. இராசகோபாலன்.

## வருந்துகிறோம்

சைதாப்பேட்டையின் பிரபல வர்த்தகரும் இயக்கத் தோழரும் திருவள்ளுவர் மன்றத்தின் தலைவருமான வேல. நடேச முதலியார் அவர்கள் 28-12-50 இரவு 12 மணிக்கு இயற்கை எய்தினார். 29-12-50 5 மணிக்கு மயானத்திற்கு முக்கிய வீதிகளின் வழியாக எடுத்துச் சென்று அடக்கம் செய்யப்பட்டது.